# நற்றினைப் பாடல்களில் பண்பாட்டுக் கூறுகள்

**முனைவர் கி.பே.மோகனாம்பிகா**

**உதவிப்பேராசிரியர் ,தமிழ்த்துறை**

**வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு-12**

**மின்னஞ்சல் –ranimohanaphd@gmail.com**

19

ஆய்வு நோக்கம் – தமிழரின் பண்பாட்டுக் கூறுகளை எடுத்துரைத்தல்

**ஆய்வுச்சுருக்கம்**

பண்படுவது பண்பாடாகும். பண்படுதல் சீர்படுத்துதல் ,செம்மைப்படுத்துதல் எனப் பொருள்படும். *'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்'* என்று கலித்தொகை விளம்புகிறது. பண் என்னும் சொல் ஒழுங்குபடுத்துதல் முறைப்படுத்துதல் என்ற பொருளைத் தருகிறது. எனவே ஒழுங்குபட்ட சமூகத்திலிருந்து தோன்றுவதே பண்பாடாகும். பண்பாடு என்பது தனிமனித ஒழுக்கத்தையும், தனிமனிதன் என்ற வட்டம் கடந்து குழு வாழ்க்கையையும் ஒரு சமுதாயத்தின் அல்லது பெரும் பகுதியின் முதன்மைப் பண்பாடாகும். சங்ககால மக்கள் வரலாற்றுப் பெருமையும் பண்பாட்டுச் செழுமையும் கொண்டவர்கள் என்பதைச் சங்க இலக்கியங்கள். எடுத்தியம்புகின்றன. நற்றிணையில் உள்ள மக்களின் 'பண்பாடு' பற்றிய கருத்துக்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

திறவுச்சொல் – நற்றிணை – அகப்பாடல்கள் – கருப்பொருள்கள் – உறைவிடம் – விருந்தோம்பல் – இல்லறம் என்னுற் நல்லறம்

முன்னுரை

மக்களிடையே பண்பட்ட வாழ்க்கை முறை நெடுங்காலமாகத் தொடர்ந்து வந்தமையால் சங்க இலக்கியத்தில் பண்பட்ட வாழ்க்கை முறைக்குரிய அறக்கருத்துக்கள் நிறைந்து காணப்படுகின்றன. பண்என்ஆம் பாடற்கு இயைபுஇன்றேல் கண்என்ஆம் கண்ணோட்டம் இல்ராத கண் என்று குறள் இயம்புகிறது. சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்து எண்ணப்படுகின்ற சிறப்பினை உடையது 'நற்றிணை.

**நற்றிணையின் காட்டும் பொருள்கள்**

முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய மூன்றும் அகப்பாடலுக்கு மிகவும் முக்கியமானவை ஆகும் இதனை,

"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை[1] (தொல்.பொருள்.3)

என்ற நூற்பாவின் மூலம் தொல்காப்பியர் விளக்கியுள்ளார். நற்றிணையில் குறிஞ்சி ,முல்லை, மருதம் நெய்தல், பாலை, என்ற ஐவகை நிலப்பகுப்பின் கீழ் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை,

விருந்தோம்பல் , வீரச் செய்திகள், உணவு , உறைவிடம், குடும்பம், திருமணம் ,கல்வி, பண்டமாற்று முறை, தெய்வ நம்பிக்கை, போன்ற பல்வேறு நிலைகளை ஆராய்ந்து அவற்றின் சிறப்பினை வெளிப்படுத்த முதற்பொருள் துணைநிற்கிறது.

உறைவிடம்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை மக்களின் வாழிடம் பகுக்கப் பெற்றுள்ளது. ஐவகை மக்களின் வாழிடம் மலை சார்ந்த பகுதிகளையும், காடு சார்ந்த பகுதிகளையும், வயல் சார்ந்ததும், கடல் பரப்பினைச் சார்ந்தும் வாழ்விடங்களை அமைத்துக் கொண்டனர் என்பதை நற்றிணைப் பாடல்களின் வழி அறிய முடிகிறது .மக்களிடையே காணப்பட்ட உணவு முறை, மலர்கள், விலங்குகள், தாவரங்கள், பறவைகள், இசைக்குருவிகள், தொழில், வாழ்க்கை முறை, ஆகியவை நிலத்திற்கேற்ப வேறுபட்டிருப்பதையும் காண முடிகிறது.

வெற்பன், சிலம்பன், கொடிச்சி, குறத்தியர், கானவர், இடையர், இடையர் ,உழவர், உழத்தியர், சேர்ப்பண், பரதவன், பரதியார் என்ற நிலத்திற்குகேற்ப மக்களின் பெயர்கள் தொழில் முறையாக வேறுபட்டிருப்பதையும் நற்றிணைப் பாடல்கள் வழி அறிய முடிகிறது.

உணவு

சங்ககால மக்கள் தத்தம் நிலவாழ் பகுதிக்கேற்ப தங்களுடைய ஆரோக்கியமான உணவினை அமைத்துக் கொண்டனர்.மலை நெல் , மூங்கிலரிசி , திணை அரிசி, வரகு , சாமை, முதிரை, செந்நெல் அரிசி, வெண்ணெல் அரிசி போன்ற பற்பல இயற்கையோடு இசைந்த உணவினையே மேற்கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர். வேட்டையாடுதல் குறிஞ்சி நில மக்களுக்கே உரியது என்றாலும் பிற நில மக்களுக்கும் தங்களுடைய நிலத்திற்கேற்ப உணவுகளை உற்பத்தி செய்தும், சேகரித்தும் வாழ்ந்துள்ளனர் என்பதைக்,

"கோடு துவையாக்குள் வாய் நாயோடு
காடுதேர் நசைஇய வயமான் வேட்டு " 2 (நற்.276)

"கல்லதர் அரும்புழை அல்கிக் கானவன்
வில்லின் தந்த வெண்-கோட்டு ஏற்றை
புனையிருங் கதுப்பின் மனையோன் கொண்டிக் குடிமுறை பகுக்கும்"
3 (நற்.336)

என்ற பாடல்கள் மூலம் மக்களின் உயர்ந்த மனப்பாங்கும், உணவு முறையும் தெரிய வருகிறது.

விருந்தோம்பல் சிறப்பு

தமிழ் மக்களின் விருந்தோம்பும் பண்பு அவர்களுடைய வாழ்வில் இரண்டறக் கலந்து ஒன்றாக திகழ்கிறது என்பதை நற்றிணையில் உள்ள பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது. இல்லறம் என்னும் நல்லறம் சிறப்புறுவதற்கு விருந்தோம்பல் என்னும் அறத்தினை இல்லறத்தார் கடைபிடித்து வந்துள்ளனர். தலைவனும் தலைவியும் தான் இல்லறத்திற்கு உரியவர்கள் என்றாலும் விருந்தோம்பல் பண்பு தலைவிக்கு உரியதானதாகும் .

"வான் இகுபு சொரிந்த வயங்கு பெயற்கடை நாள்.
விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல் இயற் குறுமகள் உறைவின் ஊரே "4 (நற். 142 )

"விருந்து விறுப்புறூஉம் பெருந்தோட் குறுமகள்
மின் ஒளித் அவிர் இழை நல்நகர் விளங்க
நடைநாட் செய்த நாவிய சீறடிப்.. 5 (நற்.221)

"எல்லி வந்த நல்லிசை விருந்திற்குக்
களரிழை அறிவை நெய்துழந் தட்ட" 6 (நற். 41)

போன்ற நற்றிணைப் பாடல் வரிகள் மூலம் தலைவியின் விருந்தோம்பல் சிறப்பினை அறிய முடிகிறது. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலே இல்லறத்தில் தலையாய நெறியாகும். முன்பின் அறியாத புதிய மனிதர்களை வரவேற்று உபசரிப்பதே 'விருந்தோம்பல்' எனப்படும். நம்முடைய உறவினர்களைப் போற்றி உபசரிப்பது விருந்தோம்பல் அல்ல. விருந்து என்ற சொல்லிற்கு புதுமை என்று பொருள் கூறுகிறார் தொல்காப்பியர். தன் கணவனுடன் ஊடல் கொண்டிருந்தாலும் விருந்தினர் வந்தால் வரவேற்று உபசரிப்பதன் மூலம் தன் சினத்தை மறைத்துக் கொள்வாள் தலைமகள் என்று நற்றிணை விளக்குகிறது. விருந்தினர் வருவதை கண்ட தலைவன் தானும் அவர்களோடு கலந்த கொள்கின்றான். விருந்தினர் நடுவே அவனை வெறுத்து ஒதுக்க விரும்பாத தலைவி ஏதும் கூறாமல் விருந்து சமைப்பதிலேயே ஈடுபட்டு விடுகிறாள். *'அட்டிலோளே அம்மா அரிவை எமக்கே வருகதில் விருந்தே'*[2] *(நற்- 120)* என்று தலைவியின் அமைதியை வியந்து தலைவன் பாடியுள்ளதைக் காணலாம்.

**தொழில்**

பண்டைச் சமூக மக்கள் வேட்டைத் தொழில் வேளாண்மை, சாமை விதத்தல், வரகு விதைத்தல், அவற்றை அரிதல், கடா விடுதல்,. மேய்த்தல், கொல்வேறு தழுவுதல், குரவைக் கூடுதல், நெல் அரிதல், மீன் பிடித்தல் ,உப்பு உண்டாக்குதல், அவற்றை விற்றல் போன்ற பல தொழில்களை செய்து தங்களுடைய வாழ்வாதாரத்திற்கு நிரந்தரமான தொழில் முறைகளை வகுத்துக் கொண்டு வாழ்ந்தவர் என்பதை நற்றிணையில் உள்ள பாடல்கள் மூலம் புலவர்கள் திறம்படக் கூறியுள்ளனர். குறிஞ்சி நில மக்கள் ஆதியில் வேட்டையாடுதலைத் தொழிலாக கொண்டிருந்தனர். யானை, பன்றி, முள்ளம்பன்றி ஆகியவற்றை வேட்டையாடி வந்துள்ளனர்.

"வெண்கோடு கொண்டு வியலறை வைப்பும்
பச்சூன் கொண்டு வல்லுகிர் முனக்கவும்" [7] (நற். 114)

"நற்கோடு நயந்த அன்பில கானவர்"8 (நற். 65)
"மலை இடம்படுத்து கோட்டிய சொல்லைத்
தளிபதம் பெற்ற கான் உழு குறவர்
சிலவித்து அகல இட்டென பல விளைந்து8 " (நற்.209)

போன்ற பாடல்கள் மூலம் தொழில் முனைந்த விதத்தை அறியலாம்..

**திருமணம்**

திருமணம் என்பது ஒரு பெண்ணுக்கும், ஓர் ஆணுக்கும் சமூகத்தால் அங்கீகரிக்கப்படும் உறவாகும். சங்க கால மக்கள் காதல் வாழ்க்கையில் திளைத்து மகிழ்ந்தனர். தலைவனும் தலைவியும் ஊர் அறியாமல் மணம் செய்து கொள்வது களவு மணம் ஆகும்.உலகத்தார் அறியாத வகையில் பெரும்பாலும் உடன் போக்கில் சென்றனர்.பிறகே ஊரார் அரிய வாழத் தொடங்கினர் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்போடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூடம் காணுங்காலை
மறையோர் தேஎந்த மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே 9" (தொல்.பொருள்களவு.-89)

என்னும் நூற்பா மூலம் விளக்கியுள்ளார்.

களவில் ஈடுபட்ட தலைவன் விரைவில் மணம் புரிந்துக் கொள்ளாமல் களவொழுக்கத்தையே நீடிக்க விரும்புகிறார் இதனையறிந்த தோழி தலைவி இடம் கடிந்து கொண்டு தலைவனை விரைவில் ஊரார் பார்க்க மணம் முடிக்குமாறு: அறிவுறுத்துகிறாள் சங்க அகப்பாடல்களில் தோழியின் செயல்பாடு முக்கியமானது மட்டுமல்ல முதன்மையானதும் கூட அந்த வகையில் வரைவுக்கடாதல் பொது மலர் வரைவு தலைவியை ஆட்சி இருத்தல் தலைவனை நெறிப்படுத்தல் என பல்வேறு சூழ்நிலையில் தோழியானவள் மிகவும் மதி நுட்பத்துடன் செயல்படுபவள்

அருங்கடி அன்னை காவல்நீவிப்
பெருங்கடை இறந்து மன்றம் போகிப்
பகலே பலரும் காண வாய்விட்டு
வான் தோய் மாமலை நாடனை
சான்றோய்அல்லை என்றனம் வரற்கே10 (நற்-365)

எனும் பாடல் மூலம் தலைவன் வேறு ஊரைச் சார்ந்தவன் என்பதை அறிய முடிகிறது மேலும் ஒரு குடியிலிருந்து மற்றொரு குடிக்குத் திருமணம் செய்வர் என்பதையும் பாடல்கள் வழி காண முடிகிறது

**தெய்வ நம்பிக்கை**

சங்ககாலம் தொட்டு இன்றுவரை மக்களிடையே தெய்வ நம்பிக்கை நிலவி வருகிறது தத்தம் நிலத்திற்கு ஏற்ப குலதெய்வ வழிபாட்டினை மேற்கொண்டிருந்தனர் குறிஞ்சி நில மக்களின் சமய நிகழ்வுகளைக் கூர்ந்து நோக்கும் போது மக்களின் உளநிலையும் பண்பு நிலையும் வெளிப்படையாக அறிய முடிகிறது தெய்வம் மலையில் உறைவதாக நம்பிக்கை அணங்கு சூரும் பற்றிய நம்பிக்கை பேய் பற்றிய நம்பிக்கை கனவு பற்றிய நம்பிக்கை போன்ற பல்வேறு வகையான நம்பிக்கைகள் மக்களிடையே நிலவி வந்துள்ளது.

அனங்கோடு நின்றது மலைவான் கொள்கெனக்
கடவுள் ஓங்குவரை பெண்மார் வேட்டெழுந்து [11] (நற். 165)

அணங்குடை அருஞ்சூழ் தருகுவள்ளனந் [12] (நற் - 559)

போருடை வருடையும் பாயா
சூருடை அடுக்கத்த கொயற்க்கு அருந்தழையே 13 (நற்- 359)

போன்றவை நற்றிணைப் பாடல்கள் மூலம் அறிய முடிகிறது

**பிற நம்பிக்கைகள்**

உண்ணாமல் நோன்பு இருந்தால் உடல் ஆரோக்கியம் கிடைக்கும் என்று அக்கால மக்கள் நம்பினர். மலைவாழ் மக்கள் தை மாதத்தில் நோன்பு இருந்ததாவும், நோன்பு இருப்பதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்தாலும் தை மாதத்தில் நோன்பு இருப்பதன் நோக்கம் அப்போது குளிர்காலமாதலால் உணவு செரிமானம் வேகமாக நடைபெறாது. எனவே நோன்பு இருந்து உண்டால் உடல் ஆரோக்கியம் பெறும் என்ற நம்பிக்கை அக்கால மக்களிடையே நிலவி இருக்கும் என்பதனை,

"வான் பெயம் நனைந்த புறத்த நோன்பியர்
தைஊண் இருக்கையின் தோன்றும் நாடன்" [14] (நற்.22)

என்ற நற்றிணைப் பாடல் விளக்குகிறது. அது மட்டுமின்றி கடவுளின் சினத்தைப் போக்க பாணர்கள் இன்னிசையால் தனித்தனர் என்றும் .தலைவனின் பிரிவு துயர் நீங்க தோழி தலைவியை யாழிசைத்து மகிழலாம் என்றும் கூறுவதும் இடம்பெற்றுள்ளது. இதனை,

"தெறல் அரும் கடவுள் முன்னர்ச் சீற யாழ்
நரம்பு இசைத்தன்ன இக்குரற் குறுகின் [23] (நற் 189)

இப்பாடல் மூலம் அக்காலத்தில் மக்கள் இசையின் மீது கொண்டிருந்த ஈடுபாட்டையும் இசையினால் கோபத்தையும் மனத்துயரையும் போக்க முடியும் என்ற நம்பிக்கையை பெற்றிருந்தனர் என அறிய முடிகிறது.

முடிவுரை

சங்க கால மக்களிடையே நிலவிய பண்பாட்டுக் கருப்பொருள் மிகத் தெளிவாக விளக்குகிறது.மேலும் அக்கால மக்கள் கொண்டிருந்த வழிபாட்டு முறை, தெய்வ நம்பிக்கை, வீரச்சிறப்பு.பண்டமாற்று முறை, விருந்தோம்பல் முறை ,உணவு முறை ,உறைவிடம் போன்ற செய்திகள் யாவும் நற்றினைப் பாடல்கள் வழி நமக்குத் தெரிய வருகிறது

**அடிக்குறிப்புகள் ..**

1. தொல்.பொருள்.3
2. நற்றிணை .276
3. நற்றிணை .336
4. நற்றிணை .142
5. நற்றிணை .221
6. நற்றிணை .41
7. நற்றிணை .114
8. நற்றிணை .65
9. நற்றிணை .209
10. தொல் பொருள்- களவு 89
11. நற்றிணை .365
12. நற்றிணை .165
13. நற்றிணை .559
14. நற்றிணை .359
15. நற்றிணை .227
16. நற்றிணை .189

பார்வை நூல்கள்

1. நற்றிணை கழக வெளியீடு -1996
2. தொல்காப்பியம் - கழக வெளியீடு -1996
3. பதிற்றுப்பத்து- கழக வெளியீடு -1996

4 அ. தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும்,

. 5 தி.சு.நடராசன், தமிழின் பண்பாட்டு வெளிகள்

6 இ.சுந்திரமூர்த்தி, இலக்கியமும் பண்பாடும்.